**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>இடைக்கால மனு எண். 2/2024</u>**

**<u>in</u>**

**<u>அசல் வழக்கு எண். 34/2024</u>**

ஜெ.சிவா .... மனுதாரர்/வாதி

**//எதிர்//**

1.காளிஸ்வரி
2. முரளி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.செல்வகுமார், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சரவணன், அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனு, மனுதாரர்/வாதியால் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் மனு சொத்துக்களில் 1, 2 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கு முடியும் வரை இடையூறு செய்யக் கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்குமாறு கோரியுள்ளார்.

**<u>2) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:–</u>**

மனு சொத்தானது கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கள்ளப்பள்ளி கிராமம் சர்வே எண்.103/7 பி, 103/7 சி மற்றும் 254/2 ஆகியவற்றில் அமைந்துள்ளது. மனுதாரர்களுக்கு மேற்படி சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டுள்ளது. தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்து ஆதியில் மனுதாரரின் பாட்டனார் பிச்சை என்பவருக்கு பாத்தியப்பட்டு அவர்

அனுபவத்திற்கு பிறகு அவரது மகனும், மனுதாரரின் தந்தையுமான ஜெயமணி என்பவர் அனுபவித்து வந்து அதன் பிறகும், இன்று வரை மனுதாரர் அனுபவம் செய்து வருகிறார்.

மனு சி பட்டியல் சொத்தானது கடந்த 21.08.2017 அன்று மனுதாரர் கிரையம் பெற்று வீடு கட்டி, விவசாயம் செய்து சொத்து வரி மற்றும் மின் இணைப்பு பெற்றுள்ளார். மனு ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களின் பட்டா மனுதாரரின் தந்தை ஜெயமணி பெயரில் உள்ளது. ஆனால், பட்டாவில் பிச்சை மகன் ஜெயமணி என்பதற்கு பதிலாக பெரியசாமி பிள்ளை மனைவி ஜெயமணி என்று உள்ளது. அதை மாற்ற மனுதாரர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

2ம் எதிர்மனுதாரர், மனுதாரரின் அரசின் முன் விரோதம் மற்றும் காழ்ப்புணர்ச்சிக்காக சொத்தை அபகரிக்க சொல்லி கொடுத்து வருகிறார். எதிர்மனுதாரர்க்ள் சட்டத்திற்கு புறம்பாக போலியான ஆவணங்களை ஏற்படுத்தி அவரது பெயரில் பட்டா, மின் இணைப்பு, வீட்டு வரி ரசீதுகள் பெற முயல்வது தெரிய வந்து மனுதாரர் மாற்றக் கூடாது என்று அவரது வழக்கறிஞர் மூலம் வருவாய் துறையினருக்கு ஊராட்சி துறைக்கும் மற்றும் மின்சார துறைக்கும் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

மேற்படி தகவலை தெரிந்து கொண்ட எதிர்மனுதாரர் குடும்பத்தார்கள் அனைவரும் மனுதாரரை அடித்து காயப்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தார்கள். மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. மனுதாரர் அவரது சொத்தை பாதுகாத்துக் கொள்ளவும், எதிர்மனுதாரர்களின் சொத்தை எந்தவிதத்திலும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று உறுதி கூறுகிறார். அதனால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்து 1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் வழக்குரையை இந்த மனுவிற்கும் எதிர் உரையாக கருத குறிப்பானை தாக்கல் செய்யப்பட்டு எதிர் வழக்குரையின் சுருக்கம்:-</u>**

எதிர்மனுதாரர்கள் உரையில், குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதியை தவிர மற்றைய அனைத்து சங்கதிகளையும் எதிர்மனுதாரர்கள் மறுக்கிறார்கள். மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை

மனு பொய்யானது உண்மைக்கு புறம்பானது, மோசடியானது. மனு சொத்துக்கள் மனுதாரருக்கு பூர்வீகமாகவும், கிரையப்படியும் பாத்தியப்பட்டது அல்ல. மனு ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்கள் மனுதாரரின் பாட்டனார் மற்றும் அவரது தந்தைக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து மனுதாரர் அனுபவத்திலும், சி அட்டவணை சொத்து கடந்த 21.08.2017 ல் கிரையம் பெற்று மனுதாரர் வீடு கட்டியும், முன் வாசல், பின் கொல்லை வைத்து விவசாயம் செய்து சொத்து வரி செலுத்தி மின் இணைப்பு பெற்றுள்ளார் என்பது பொய்யாகும்.

மேலும், தாவா ஏ மற்றும் பி பட்டியல் சொத்துக்கள் பிச்சை மகன் ஜெயமணி என்பதற்கு பதிலாக பட்டாவில் பெரியசாமி பிள்ளை மகன் ஜெயமணி என்று உள்ளதும் அதற்காக நடவடிக்கை எடுத்து வருவதாக சொல்வதும் பொய்யாகும். மனுதாரர், பிரதிவாதியின் சொத்துக்களை அபகரிக்கும் முயற்சியாக தாவா தாக்கல் செய்துள்ளார். அரசியல், காழ்ப்புணர்ச்சி மற்றும் முன் விரோதம் காரணமாக எதிர்மனுதாரர்கள் தொல்லை கொடுத்ததாக சொல்வது பொய்யாகும். எதிர்மனுதார்கள் சொத்தை மோசடி செய்ய தீய எண்ணத்தில் போலியான ஆவணங்களை ஏற்படுத்தி அவர்கள் பெயரில் பட்டா, மின் இணைப்பு, வீட்டு வரி ரசீதுகள் ஏற்பட்டு எதிர்மனுதாரரின் பெயரை பட்டாவில் மாற்ற முயன்றார்கள் என்பதற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக கூறுவது உண்மைக்கு புறம்பானதாகும்.

எதிர்மனுதாரர்கள், மனுதாரரை அடித்து காயப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்பது பொய்யான சங்கதியாகும். மனுதாரர் பிறர் சொத்துக்களுக்கு ஆசைப்பட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து மனுதாரரினுடையது அல்ல. மனுதாரருக்கு கள்ளப்பள்ளி கிராமத்தில் நிலம் இல்லை. அதனால் மனுதாரின் தந்தை ஜெயமணிக்கு இலவச வீட்டு மனை 2.48 செண்ட் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. மனுதாரரின் தந்தைக்கு மூன்று பெண்கள் இரண்டு ஆண்கள் இவ்வாறு இருக்க மனுதாரரின் பெயருக்கு மட்டும் மற்ற வாரிசுகளை சேர்க்காமல் பட்டா மாறுதல் கோர இயலாது.

மனு ஏ அட்டவணை சொத்தின் சர்வே எண்.103/7 சி உள்ள சொத்தானது ஆதியில் பெரியசாமி மனைவி ஜெயமணி என்பவருக்கு பாத்தியப்பட்டது. அரசு ஆவணங்களிலும் அவ்வாறு உள்ளது. ஜெயமணி என்பவர்

வேறு சமுதாயத்தை சேர்ந்தவர். மனுதாரர் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர். சர்வே எண்ணில் 103 ல் பெரும் பகுதி 103/7 பி தவிர ஏனைய உட்பிரிவுகள் அனைத்தும் பெரியசாமி மனைவி ஜெயமணி வகையறாவுக்கு பாத்தியப்பட்டு அ-பதிவேடு உள்ளது. ஜெயமணி என்ற பெயரில் உள்ள தவறான பட்டாவை வைத்துக்கொண்டு மனுதாரர் அவரது தகப்பனார் பெயருடன் ஒத்துபோவதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

தாவா பி அட்டவணை சொத்தானது சர்வே எண்.103/7 பி ல் உள்ளது. ஆதியில் பட்டாபிராமையர் மற்றும் 106 பேருக்கு பாத்தியப்பட்டது. மொத்தம் விஸ்தீரணம் ஹெக்.0.36.50 ஆகும். ஏக்.0.90 செண்ட் ஆகும். மேற்படி சொத்தை 500 சதுர அடிகளாக பிரித்து விற்பனை செய்து பலர் அனுபவித்து வருகிறார். ஒரு கிரையதாரரான பிச்சைமுத்து பிள்ளை கடந்த 22.08.1984 ல் பாகபிரிவினை செய்துள்ளார்.

சி அட்டவணை சொத்தானது தாவா பி அட்டவணை சொத்தை ஒட்டி தென்புறம் அமைந்துள்ளது. நான்கெல்லையில் வடக்கு எல்லையாக காத்தாபிள்ளை மகன் நிலத்திற்கு தெற்கு (ஜெயமணி சொத்திற்கும் தெற்கு) என்று குறிப்பிடவில்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. சி அட்டவணை சொத்தில் ச.எண்.254/2 ல் ஹெக்.0.01.14 ஆதியில் முனுசாமி என்பவர் ராணுவத்தில் பணியாற்றி அவருக்கு அரசாங்கத்தால் தோராய பட்டா வழங்கப்பட்டு முனுசாமியின் வாரிசுதாரருக்கு தான் பாத்தியப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் அரசாங்கத்திற்கு சேர்ந்திருக்க வேண்டும்.

மனுதாரர் முனுசாமியின் இறப்பிற்கு பிறகு சொத்தை அபகரிக்க வேண்டி அவரது வயது மூப்பினையும் இயலாமையை சாதகமாக்கி தாயார் செய்யப்பட்ட உயில் சாசனத்தை பின்னிட்டு சொத்து அரசாங்கத்திற்கு சொந்தமாக சென்று விடும் என்பதால் கிரைய ஆவணத்தை மனுதாரர் பெயருக்கு ஏற்படுத்திக் கொண்டார். அதனால் மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

3) இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5

வரையிலான ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியுள்ள இடைகால உறுத்துக்கட்டளை மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா?** என்பதே ஆகும்.

5) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசிலினை செய்யப்பட்டது.

6) மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்ட கற்றிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் மனு ஏ மற்றும் பி அட்டவணை சொத்து மனுதாரரின் மூதாதையருக்கு பாத்தியப்பட்டு சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றும், சி அட்டவணை கிரையம் பெற்ற சொத்தை வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர்கள் வீண் விரோதம் கொண்டு மனுதாரர்களிடம் இருந்து சொத்தை அபகரிக்க முயல்கிறார்கள் என்றும், ஏ மற்றும் பி அட்டவணை சொத்தானது பட்டாவில் பெயர் தவறுதல் ஏற்பட்டதை சாதகமாக்கி கொண்டு எதிர்மனுதாரருக்கு அவர்களுடைய பெயரில் வருவாய் ஆவணங்களை மாற்ற முயற்சி செய்கிறார்கள் என்றும், எதிர்மனுதாரரின் குடும்பத்தார்கள் மனுதாரரை அடித்து காயப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தும், இடையூறு செய்கிறார்கள் என்றும் அதனால் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கும்படியும் வாதிட்டார்.

7) 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், வாதி, அவரது தந்தை பெயர் ஜெயமணி என்பதும், பட்டாவில் உள்ள பெரியசாமி பிள்ளை மனைவி ஜெயமணி என்பதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு சர்வே எண்.103/7B சொத்தை அபகரிக்க முயல்கிறார் என்றும், வாதி வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்றும், ஆனால், பெரியசாமி மனைவி ஜெயமணி வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்றும், மேலும் சர்வே எண்.254/2 ல் உள்ள சொத்து ராணுவத்தில் பணியாற்றிய முனுசாமி என்பவருக்கு அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டு அவருக்கு வாரிசு இல்லாததால் அவருடைய சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கிறார் என்றும், பிரதிவாதிகள் வாதியை அடித்து காயப்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தாக வழக்கிறக்காக பொய்யாக சொல்லியுள்ளார் என்றும்,

வழக்கின் சங்கதியை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கில் உள்ள சங்கதிகள் சாட்சி குறுக்கு விசாரணைக்கு உட்படுத்திய பின்பு தான் உண்மைதன்மை தெரிய வரும் என்றும், அதனால் வாதி தரப்பு சாட்சிகள் விசாரித்தால் தான் உண்மை தெரியும் என்றும், இடைக்கால உறுத்துக்கட்டளை பெற வாதி தூய கரத்துடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**8)** ம.சா.ஆ.1 கணிணி பட்டா எண்.289 மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது புல எண்.103/7 பி, 103/7 சி ஆகியவை பெரியசாமி பிள்ளை மனைவி ஜெயமணி என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி பட்டா பெயர் மாற்றத்தை மனுதாரர் தரப்பில் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்பட்டிருந்தாலும், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ன விவரம் கூறப்பட்டது என்ற விவரம் இல்லை.

**9)** ம.சா.ஆ.2 21.08.2017 ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் இணையவழி சான்றிட்ட நகல். மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது கள்ளப்பள்ளி நத்தம் சர்வே எண்.102 ஹெக்.2.22.0 புதிய நத்தம் சர்வே எண்.254/2 ஹெக்.0.01.14 (114.0 சதுர மீட்டர்) மனை நிலத்திற்கு நான்கெல்லை. காலி நத்ததிற்கும் கிழக்கு காத்தாபிள்ளை மனைக்கும் தெற்கு. காலி நத்தத்திற்கும் மேற்கு, கிழமேல் ரோட்டிற்கு வடக்கு என்று குறிப்பிட்டு ரூ.42,180/- மற்றும் பொது பாத்தியம் அளித்து ரூ.820/- என்று ரூ.43,000/- குறிப்பிட்டு முனுசாமி மனைவி தங்கம்மாள் என்பவர் ஜெயமணி குமாரர் சிவா அவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. மேற்படி, பத்திரத்தில் நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இரண்டு நான்கெல்லைகளான சொத்திற்கு மேற்கு, தெற்கு ஆகிய இடங்கள் காலி நத்தம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண் குறிப்பிடவில்லை அல்லது யாருக்கு பாத்தியப்பட்டு அனுபவத்தில் உள்ளார்கள் என்பதும் குறிப்பிடவில்லை. இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும், மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை தான் மனுதாரர் மனுவில், சி அட்டவணை சொத்தாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், மனுவில் சி அட்டவணை சொத்திற்கு நான்கெல்லை குறிப்பிடவில்லை. இதுவும் ஒரு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள ஏ, பி அட்டவணை சொத்திற்கும்

நான்கெல்லை குறிப்பிடவில்லை.

10) ம.சா.ஆ.3 கணிணி பட்டா எண்.425. மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது நத்தம் புல எண்.254/2, பழைய புல எண்.102 ஹெக்.0.1.14 ஜெயமணி மகன் சிவா என்பவர் பெயரில் உள்ளது.

11) ம.சா.ஆ.4 சொத்து வரி ரசீது இணைய வழி நகல். மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது வரிவிதிப்பு எண்.2522, கதவு எண்.12/119 என்ற வீட்டிற்கு நூலக வரி 38 ரூபாயும், சொத்து வரி 380 ரூபாயும் மொத்தம் 418 ரூபாயும் வசூலிக்கப்பட்டதாக உள்ளது.

12) ம.சா.ஆ.5 மின் கட்டண ரசீது இணைய வழி நகல். மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது தங்கம்மாள் என்பவர் பெயரில் 16.08.2024 ம் தேதி ரூ.141 செலுத்தப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

13) மனுதாரர் மனுவில் கூறியுள்ள ஏ, பி, சி அட்டவணை சொத்துக்களுக்கு எதற்கும் நான்கெல்லைகள் குறிப்பிடாமல் வழக்கும், மனுவும் தாக்கல் செய்துள்ளார். நான்கெல்லைகள் குறிப்பிடாமல் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கினால் அருகில் உள்ள பல நபர்களை மனுதாரர் நீதிமன்ற உத்தரவை காட்டி அச்சுறுத்தல் வாய்ப்பு உள்ளது. மேலும், சி அட்டவணை சொத்தை பொறுத்து கிரையம் பெற்றதாக சொன்னாலும், மேற்படி, பத்திரத்தில் நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இரண்டு நான்கெல்லைகளான சொத்திற்கு மேற்கு, தெற்கு ஆகிய இடங்கள் காலி நத்தம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண் குறிப்பிடவில்லை அல்லது யாருக்கு பாத்தியப்பட்டு அனுபவத்தில் உள்ளார்கள் என்பதும் குறிப்பிடவில்லை என்று முன்கண்டவாறு முடிவு செய்துள்ளதாலும் நான்கெல்லைகள் குறிப்பிடாமல் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கினால் அருகில் உள்ள பல நபர்களுக்கு தொந்தரவு ஏற்பட்டு அதன் மூலம் பல வழக்குகள் எழும் வாய்ப்புண்டு. அதனால் பல வழக்குகள் எழுவதை தடுக்கும் நோக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை மனுதாரர் பெற தகுதியற்றவர் என்றும் இந்த மனுவில் முதல்நிலை நோக்கம் சமநிலை வாய்ப்பும் மனுதாரர் பக்கம் இல்லை என்றும் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு

செய்கிறது.

இறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு ஜூன் 27 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ Digitally signed by RAMAIYAH BAGYARAJ Date: 2025.07.02 10:54:28 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**கிருஷ்ணராயபுரம்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :– இல்லை**

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–**

| ஆவண. எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | கணிணி பட்டா எண்.289 | – |
| ம.சா.ஆ.2 | 21.08.2017 | கிரையப்பத்திரம் | இணையவழி சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.3 | – | கணிணி பட்டா எண்.425 | – |
| ம.சா.ஆ.4 | | சொத்து வரி ரசீது | இணைய வழி நகல். |
| ம.சா.ஆ.5 | | மின் கட்டண ரசீது | இணைய வழி நகல். |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை.

RAMAIYAH BAGYARAJ Digitally signed by RAMAIYAH BAGYARAJ Date: 2025.07.02 10:54:33 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**கிருஷ்ணராயபுரம்.**